# 06 பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னர் இலங்கை

பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னர் இந்நாட்டு வரலாற்றில் காணக்கூடிய முக்கிய இயல்பு மிகக் குறுகிய காலத்திற்கு மட்டும் நிலைக்கக் கூடிய இராசதானிகள் பல தோன்றியமையாகும். தென்மேற்கில் உருவாகி குறுகிய காலத்தில் வீழ்ச்சி அடைந்த தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகல, கம்பளை, கோட்டை எனும் பிரதான இராசதானிகளுக்கு மேலதிகமாக யாழ்ப்பாண இராச்சியமும் இக்காலத்தில் காணப்பட்டது. இவ்வரசுகளைப் பற்றிய விடயங்களை கற்பதே இவ்வத்தியாயத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது மூதாதையரால் நிர்மாணிக்கப்பட்ட பராக்கிரம சமுத்திரம் போன்ற பெரிய குளங்களை அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான பெருங்குளங்களை அமைத்ததன் காரணம் என்ன?

அவர்கள் குளங்களுடன் தொடர்புடைய அரசியல், சமூக, பொருளாதார நிலைகளுக்கு அமைய வாழ்ந்தனர். அச்சமூகமானது குளமும் தாதுகோபமும் எனும் அடிப்படையின் மீது கட்டியெழுப்பப்பட்டிருந்தது. புராதன கால அரசர்கள் குளங்களையும் தாதுகோபங்களையும் கட்டியெழுப்புவது தமது கடமையெனக் கருதிச் செயற்பட்டனர்.

எனினும் குளங்களுடன் தொடர்புடைய நீர்வள நாகரிகம் இந்தியாவிலிருந்து வந்த கொடூரமான மாகன் என்பவனின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு அழிந்தொழிந்த தென்பதை நாம் முன்னர் அறிந்தோம். அத்தோடு குளமும், தாதுகோபமும் என்ற கோட்பாடும் முற்றாக இல்லாமல் போய்விட்டது.

## மாகனால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகள்


★ நிர்வாகத்துடன் தொடர்புடைய குடும்பங்களை அழித்தமையால் நிர்வாக நடவடிக்கைகள் சீர்குலைந்தமை.
★ தலைநகர் உட்பட இராசரட்டையின் பல இடங்களிலிருந்த கட்டடங்களை அழித்தல்
★ விகாரைகளை அழித்து அங்கிருந்த ஏட்டுச் சுவடிகளைப் பாழ்படுத்தியமை
★ குளங்களை அழித்துப் பொருளாதாரத்தை சீர்குலைத்தமை.

## இராசதானிகள் தெற்மேற்கிற்கில் இடம் பெயர்தல்

மேற்கூறப்பட்ட நிலைமை தோன்றியதால், தலைவர்கள் பௌத்த குருமார், பொதுமக்கள் ஆகியோர் பாதுகாப்புத் தேடித் தென்மேற்குப் பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்தனர். அவர்களில் சிலர் அப்பிரதேசங்களில் காணப்பட்ட காட்டுப்பகுதிகளையும் குன்றுப் பகுதிகளையும் அண்மித்த இடங்களைத் தலைநகராகக் கொண்டு, அவற்றைச்

சூழவுள்ள பகுதிகளை ஆட்சி செய்தனர். அவ்வாறு ஆட்சி செய்தவர்களில் சிலர் வருமாறு

| | | |
|---|---|---|
| யாப்பகூவ | - | சுப (படைத்தளபதி) |
| மினிப்பே | - | சங்க (படைத்தளபதி) |
| கோவிந்தமல | - | புவனேகபாகு ஆதிபாத (பிரதானி) |
| தம்பதெனிய | - | விஜயபாகு (இளவரசன்) |




*13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டுவரையிலான இலங்கையின் இராசதானிகள்*
*படம் 6.1*

## தம்பதெனிய இராசதானி (கி.பி 1232 - 1270)

பிரதேச இராசதானிகளை அமைத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவனாக இருந்தவன் வன்னித்தலைவன் என்ற வகையில் செயற்பட்ட வத்ஹிமி விஜயபாகு இளவரசனாவான். (மூன்றாம் விஜயபாகு) பௌத்த குருமார்களதும், வன்னித் தலைவர்கள் சிலரினதும் உதவியைப் பெற்று இவன் அரசனானான். தம்தெனிய அரசின் முதல் அரசன் இவனாவான். ஓரளவு பாதுகாப்பான இடத்தில் தம்பதெனிய அமைந்திருந்தமை இதனைத் தலைநகராக்கியமைக்கான காரணமாக இருக்கலாம்.

பொலன்னறுவையில் இருந்த மாகனைத் துரத்திவிடுவதற்கு ஆயத்தங்களை மேற்கொள்வதற்குப் பொருத்தமான இடமாக இதனை அம்மன்னன் கருதியிருக்கலாம்.

மூன்றாம் விஜயபாகு மன்னனால் மாகனைத் தோற்கடிக்க முடியாது போனாலும், எதிரிக்கு எதிராக ஒன்று திரண்டு எதிர்க்கக்கூடிய ஒரு நிலையத்தைத் தேர்ந்தெடுத்த பெருமையை அம்மன்னன் தனதாக்கிக் கொண்டான்.

கொத்மலையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவைக் கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல குன்றின் உச்சியில் தலதாமாளிகையை அமைத்து, அதனை அங்கே வைத்த பெருமையும் விஜயபாகுவிற்கே உரியதாகும். தந்ததாதுவைப் பெற்றதால் தனது அரசியல் உரிமையையும் இவன் நிலைநாட்டிக் கொண்டான்.

மூன்றாம் விஜயபாகுவின் மரணத்தின் பின்னர் அவனது மகன் இரண்டாம் பராக்கிரமபாகு அரசனானதுடன் கி.பி 1270 வரை முப்பத்தைந்து ஆண்டுகளாக ஆட்சி செய்தான். தம்பதெனிய அரசின் சிறந்த அரசனாக அவன் மதிக்கப்படுகின்றான்.

### இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் சாதனைகள்

★ 1255 இல் பாண்டிய படையினரின் உதவியைப் பெற்று நாற்பது ஆண்டுகளாக இந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த கலிங்க மாகனைத் தோற்கடித்தான்.

★ பாண்டியரின் உதவியைப் பெற்று, ஜாவா நாட்டைச் சேர்ந்த சந்திரபானுவைத் தோற்கடித்தான்

★ இரண்டாம் பராக்கிரமபாகு சிறந்த கவிஞனாவான்.

இரண்டாம் பராக்கிரமபாகுவின் பின்னர் அவனது மகனான போதிசத்துவ விஜயபாகு எனப்பட்ட நான்காம் விஜயபாகு அரசனானான். ஆனால் இவன் இரண்டு ஆண்டுகளே ஆட்சி செய்தான். மித்த என்ற படைத்தலைவன், வேலையாள் ஒருவனுக்கு இலஞ்சம்


கொடுத்து கி.பி 1272 இல் அரசனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். அரசுரிமை இல்லாத ஒருவன் அரசனானதால் கலகம் ஏற்பட்டது. எனவே மித்த என்ற படைத்தலைவனைக் நீக்கிவிட்டு அரசுரிமையை நான்காம் விஜயபாகு மன்னனின் சகோதரன் திரும்பவும் ஆட்சிப் பொறுப்பை பெற முயற்சி செய்து வெற்றி பெற்றான்.

## யாப்பகூவ இராசதானி (கி.பி 1272 - 1300)

தம்பதெனிய அரசின் மன்னனாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாம் புவனேகபாகு தம்பதெனியவை விட யாப்பகூவ பாதுகாப்பான இடம் என உணர்ந்து தன் இராசதானியை யாப்பகூவவிற்கு மாற்றிக் கொண்டான். பொலன்னறுவையில் இருந்த மாகனின் எதிர்ப்பை சமாளிக்கும் பொருட்டு சுப என்ற படைத் தலைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட குன்றுகள் நிறைந்த பாதுகாப்பான இடமே யாப்பகூவவாகும்.

முன்னர் தம்பதெனியாவை ஆண்ட போதிசத்துவ விஜயபாகு அரசனுக்கு ஆதரவளித்த வன்னித் தலைவன் ஒருவன் இவனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தான். மேலும் காலிங்கராயர், போதி கங்கதேவ எனும் இவரின் தலைமையின் கீழ் திராவிட ஆக்கிரமிப்பாளர்களுக்கு முகங் கொடுக்கவும் நேர்ந்தது. இச்சவால்களை வெற்றிகரமாக அவனால் சமாளிக்கவும் முடிந்தது.

இக்காலத்தில் வடக்கில் சந்திரபானு என்ற அரசன் (செந்தமேன்) ஆண்டதாக மார்க்கபோலோ எனும் சஞ்சாரியின் குறிப்புக்களில் கூறப்பட்டுள்ளது. அவன் பாண்டியனின் உதவியைப் பெற்ற மன்னன் ஆவான். முதலாம் புவனேகபாகு மன்னனுக்கு அவனது ஆக்கிரமிப்பை எதிர்த்பார்த்து தயார் நிலையில் இருக்க வேண்டியிருந்தது.



*யாப்பகூவ இராசதானி*
*படம் 6.3*

இம்மன்னன் வர்த்தகத்தை விருத்தி செய்வதற்காக எகிப்து நாட்டுடன் தொடர்புகளை மேற்கொள்ள முயற்சித்துள்ளான். இந்நாட்டில் உள்ள வளங்களைப் பற்றியும் மேற்கொள்ளக் கூடிய வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாகவும் எகிப்திய சுல்தா (மன்ன)னிடம் தெரியப்பபடுத்து-வதற்காக கி.பி 1283 ஆம் ஆண்டில் தூதுக்குழு ஒன்றை அனுப்பி வைத்தான்

முதலாம் புவனேகபாகு மரணத்தின் பின்னர் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து இரண்டாம் புவனேகபாகு (முதலாம் புவனேகபாகுவின் மகன்) அரசேற்றான். ஏழாண்டுகளின் பின்னர் தனது தலைநகரத்தை குருநாகலைக்கு இவன் மாற்றிக் கொண்டதோடு, இவ்விராசதானியின் வரலாறு முற்றுப் பெற்றது.

## குருநாகல் இராசதானி (கி.பி 1300 - 1341)

குருநாகல் இராசதானி கி.பி. 1300 ஆம் ஆண்டு இரண்டாம் புவனேகபாகுவால் இராசதானியாக்கப்பட்டது. அவனுக்குப் பின்னர் அவனது மகனான நான்காம் பராக்கிரமபாகு அரசனானான். குருநாகலை காலத்தின் சிறந்த அரசனாக இவன் போற்றப்பட்டான். புத்த சமயத்தினதும், கல்வியினதும் வளர்ச்சிக்காக இவன் பல பணிகளை ஆற்றினான். இவன் ‘பண்டித பராக்கிரமபாகு’ எனவும் அழைக்கப்பட்டான்.

இவனது ஆட்சி குருநாகல் பிரதேசத்தில் மட்டுமின்றி கண்டி, கேகாலை, கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய தென்மேற்குப் பிரதேசங்களிலும் பரவியிருந்தது.

இவனது ஆட்சியின் பின்னர் பதினைந்து ஆண்டுகள் வரை பல அரசியல் நடவடிக்கைகள் நிகழ்ந்துள்ளன. என்றாலும் அடுத்து மூன்றாம் புவனேகபாகு, விஜயபாகு எனும் இருவர் அரசாண்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## கம்பளை இராசதானி (கி.பி 1341 - 1415)

கம்பளை அரசின் ஆட்சியாளன் கி.பி 1341 இல் அரசனான நான்காம் புவனேகபாகு ஆவான். அராபிய தேச யாத்திரிகனான இபின்பதூதா என்பவரின் கூற்றுப்படி, இவன் வலிமையற்ற மன்னனாவான். இவனுக்குப் பின் அரசனான 5 ஆம் புவனேகபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் லங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை என்பன நிறுவப்பட்டன. மரவேலைப்பாட்டிற்குப் புகழ்பெற்ற அம்பக்க தேவாலயம் அமைக்கப்பட்டதும் இக்காலப்பகுதியிலேயே ஆகும்.



*லங்காதிலக விகாரை*
*படம் 6.4*



*அம்பக்க மரச்செதுக்கல்*
*படம் 6.5*

கம்பளை காலத்தின் இறுதிப் பகுதியில் அரசர்களை விட சேனாதிபதிப் பதவிகளை வகித்த பிரதானிகளின் குடும்பத்தவர்கள் பலம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வாறு பலம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்த இரு குடும்பங்கள் கம்பளை சேனாதிலங்கார குடும்பமும் இறைகம அழகேஷ்வரர் எனப்பட்ட

அழக்ககோனார் குடும்பங்களுமாகும். சேனாதிலங்கார நான்காம் புவனேகபாகுவின் பிரதம அமைச்சராக இருந்து புகழ்பெற்றான்.

நான்காம் புவனேகபாகு மன்னனின் பின்னர் கம்பளைக்கு ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனானான். அவனைப் பதவி கவிழ்த்து, கி.பி 1360 இல் மூன்றாம் விக்கிரமபாகு அரசனானான். இவ்வரசனின் காலத்தில் வடக்கை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் எனும் அரசர்கள், நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் கொள்ளையிட்டு மக்களுக்குப் பேரிடர் விளைவித்தனர். அவ்வபாயத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்க முக்கியமான போர்த்தளம் ஒன்று தேவையாய் இருந்தது.

**ஆரியச் சக்கரவர்த்தியின் ஆக்கிரமிப்பு சார்ந்த விடயங்கள்**

★ இக்காலத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் தெற்கிலும் பரவிக் கொண்டிருந்தது.

★ அவர்கள் கம்பளை இராச்சியத்தின் மீது வெற்றிகரமான ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு, அப்பிரதேசங்களில் வரிவசூலிப்பதிலும் ஈடுபட்டனர்.

★ சிலாபம், நீர்கொழும்பு, வத்தளை, கொழும்பு ஆகிய இடங்களில் கோட்டைகளையும் நிறுவிக் கொண்டனர். அதன் மூலம் மேற்குக் கரையிலுள்ள துறைமுகங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி வருமானத்தையும் ஆரியச் சக்கரவர்த்திகள் ஈட்டிக் கொண்டனர்.

இத்தேவைகளுக்காவே மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் தளபதியாகத் திகழ்ந்த பிரதானி நிஸங்க அழகக்கோனார் அல்லது அழகேஸ்வர என்பவரால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை கட்டியெழுப்பப்பட்டது. இக்கோட்டை சதுப்பு நிலப் பிரதேசத்தில் நீர்ப் பாதுகாப்பைக் கையாண்டு அமைக்கப்பட்டது. இக்கோட்டையைப் பயன்படுத்தி, ஆரியச் சக்கரவர்த்திகளைத் துரத்தியடித்து துறைமுகங்களை மீட்டெடுத்து, விக்கிரமபாகு மன்னனின் பலத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் அழகேஸ்வர வெற்றிபெற்றான்.

மூன்றாம் விக்கரமபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் அரசானான ஐந்தாம் புவனேகபாகுவும் பலவீனமானவனாக இருந்தான். அவனுடைய ஆட்சிக் காலத்தில் அழகக்கோனார் வம்சத்தின் அதிகாரம் உச்சநிலையில் இருந்தது. அடுத்து அரசேற்ற வீரபாகு அரசனின் காலத்தில் வீர அழகேஸ்வர என்பவன், றைகமையில் ஆட்சி செய்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இதன்படி அழகேஸ்வர குடும்பம் கம்பளை இராசதானிக்கு உட்பட்டிருந்த பிரதேசங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு, இறைகமையில் இருந்து கொண்டு அப்பிரதேசத்தை ஆட்சிசெய்திருப்பது தெரியவருகிறது. இவ்வாறு கம்பளை, இறைகம என்று இரண்டு ஆட்சியாளர்கள் இருந்த காலத்தில் சீனப் பேரரசன் இலங்கையின் அரசியல் நடவடிக்கையில் தலையீடு செய்துள்ளான்.

## சீனத் தலையீடு தொடர்பான விபரங்களாவன

★ சீனாவின் யுங் லோ பேரரசனால் அனுப்பப்பட்ட செங்ஹோ சேனாதிபதி கி.பி 1405 இல் இலங்கையை வந்தடைந்தான்.

★ இவன் அரசனுக்கு ஏனைய பிரதானிகளுக்கும், வணக்க ஸ்தலங்களுக்கும் காணிக்கைகள் கொண்டு வந்தான்.

★ இறைகம ஆட்சியாளனான அழகேஸ்வர இவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.


★ சீனத் தளபதி கொண்டுவந்த காணிக்கைகளை தெவுந்தரை தேவாலயத்திற் சமர்ப்பித்து விட்டுத் திரும்பிச் சென்றான்.

★ கி.பி 1411 இல் செங்ஹோ தளபதி பெரும்படையுடன் மீளவும் இலங்கைக்கு வந்தான்.

★ வீர அழகேஸ்வர சண்டைக்கு ஆயத்தமாயிருந்தான்.

★ வீர அழகேஸ்வரனைத் தோற்கடித்து அவனைக் கைது செய்து சீனாவுக்குக் கொண்டு சென்றான்.

## கோட்டை அரசு (கி.பி 1415 - 1521)





கோட்டைஇராச்சியம் நில அமைப்பு
படம் 6.6

அழகேஸ்வரன் என்ற சேனாதிபதியால் பாதுகாப்பு அரணாகவும், யுத்த மத்திய நிலையமாகவும் ஆரம்பித்த நகர் கி.பி 1415 ஆம் ஆண்டு இலங்கை அரசின் தலைநகராகியது. 6ம் பராக்கிரமபாகு கி.பி 1415 ஆம் ஆண்டு இறைகம பாராக்கிரமபாகு எனும் பெயரில் கோட்டைக்கு அரசனானான். இவன் கோட்டையின் அரசனாகும் போது இலங்கையில் பல பிரதேச அரசுகள் இருந்தன. வடக்கில் யாழப்பாணப் பிரதேசத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி செய்தனர். மலைநாடு ஜோதிய எனும் பிரதேச ஆட்சியாளன் ஒருவனால் ஆளப்பட்டது. கோட்டை அரசின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளாத இவர்கள் சுதந்திர ஆட்சியாளர்களாகச் செயற்பட்டனர். இவை தவிர்ந்த வன்னிப் பிரதேசங்களில் பல சுதந்திர அரசுகள் இருந்தன.

6 வது பராக்கிரமபாகு மன்னன் இலங்கையை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்தமை.

- ★ வன்னி ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தி அப்பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிறுவினான்.
- ★ தமது வளர்ப்பு மகனான சம்புமல் குமாரன் மூலம் கி.பி 1450 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசை வெற்றிக் கொண்டு அதனைக் கோட்டையுடன் இணைத்தான். தான் வெற்றி கொண்ட பிரதேசத்தின் ஆட்சியாளனாக சப்புமல் குமாரனையே நியமித்தான்.
- ★ மலைநாட்டு ஆட்சியாளனான ஜோதிய என்பவனால் மேற்கொள்ளப்பட்ட கலவரத்தை அடக்கும்பொருட்டு சம்புமல்குமாரனின் சகோதரனான அம்புலுகல குமாரனின் தலைமையில் படையொன்றை அனுப்பி அப்பிரதேசத்தையும் கோட்டையுடன் இணைத்துக் கொண்டான்.
- ★ இலங்கையை ஒன்றிணைத்த இறுதி ஆட்சியாளனாக விளங்குபவன் 6 ஆம் பராக்கிரமபாகு ஆவான்.

6 ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம் அமைதியும், சுபீட்சமும், நிலவிய காலப்பகுதியாக விளங்கியது, 6வது பராக்கிரமபாகுவிற்கு ஆண்பிள்ளைகள் இல்லாததால் அவனது மகளின் மகனான ஜயபாகுவிற்கு அரசுரிமை கிடைத்தது. ஆனால் அக்காலத்தில் யாழ்ப்பாண ஆட்சியாளனாக விளங்கிய சப்புமல்குமாரன் அவனைக் கொன்றுவிட்டு 6ஆம் புவனேகபாகு என்ற பெயரில் கோட்டையின் அரசனானான். இவனுக்கு எதிராகப் பல கலவரங்கள் ஏற்பட்டன. அவன் அவற்றை அடக்கியபொழுதிலும் அவனது மரணத்தின் பின் அரசு மீண்டும் பிளவுப்பட்டது. இவனுக்குப் பின் 7 ஆம் பராக்கிரமபாகு அரச-னானான். எனினும் அம்புலுகலகுமாரன் புதிய அரசனை எதிர்த்து தோல்வியுறச் செய்து எட்டாம் வீர பராக்கிரமபாகு என்ற பெயரில் அரசனானான். இக்காலத்தில் யாழ்ப்பாணம், கண்டி ஆகிய அரசுகள் கோட்டை அரசினின்று பிரிந்து சுதந்திர அரசுகளாகின. இந்த அரசனது காலத்திலேயே போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர்.




*விஜயபாகு கொலையின் பின்னர் இலங்கையின் அரசியல் பிரிவுகள்*
*படம் 6.4*

## பயிற்சி

01. பொலன்னறுவை இராசதானியின் வீழச்சியின் பின்னர் தோன்றிய அரசுகளின் முக்கிய ஆட்சியாளர்கள் பற்றிய விபரங்களை சேகரித்துக் கைநூல் ஒன்று தயாரிக்க.

02. பொலன்னறுவை இராசதானியின் பின்னர் உருவான இராசதானிகள் எதிர்நோக்கி இருந்த உள்நாட்டு படையெடுப்புகளை அட்டவணைப்படுத்துக.

## பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சியின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள்

வீர பராக்கிரமபாகு மன்னனின் பின்னர் 9ஆம் பராக்கிரமபாகு எனும் தர்மபராக்கிரமபாகுவும், அதன் பின்னர் 6ஆம் விஜயபாகுவும் அரசனாகினர். 6 ஆம் விஜயபாகுவுக்கு எதிராக அவனது பிள்ளைகள் மூவரும் கி.பி 1521ம் ஆண்டு செய்த சதியின் விளைவாக அரசன் கொல்லப்பட்டான். இச்சம்பவம் விஜயபாகு கொலை எனப்படும். இதன் பின்னர் கோட்டை அரச சகோதரர்கள் மூவரிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டது. இதன்படி கோட்டை, சீதாவாக்கை, இறைகம எனும் மூன்று பிரிவுகள் ஏற்பட்டதுடன் யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இராச்சியங்கள் சுதந்திர அரசுகளாக செயற்படத் தொடங்கின. இவை தவிர பழைய இராஜரட்டைப் பிரதேசத்திற்குச் சொந்தமான வனாந்தரமான பிரதேசம் ‘வன்னியர்’ எனப்பட்ட சுதந்திர ஆட்சியாளர்களால் ஆளப்பட்டு வந்தது.

## சமுக, பொருளாதார, இலக்கிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

குளங்களுடன் (விவசாயத்துடன்) தொடர்புடைய பண்பாடு நிலவியது, அரசுக்கள் பல இடங்களுக்கும் மாற்றம் பெற்றன. அரசின் பாதுகாப்பிற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டு இயற்கை அரண்களால் சூழப்பட்ட இடங்கள் இராசதானிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இவ்வாறு மாற்றம் பெற்ற இராசதானிகள் சிறிது காலமே ஓரிடத்தில் நிலைத்திருந்தன. இதனால் அரசர்கள் விவசாயத்திலும் நீர்ப்பாசனத்திலும் அதிக கவனம் செலுத்தவில்லை. விவசாயத்தின் பொருட்டு மழையையே நம்பி இருந்தனர்.

விவசாயத்தில் நெல் முக்கிய இடம் வகித்தது. தண்ணீர் குறைவான இடங்களில் சேனைப் பயிர்ச்செய்கையும், சற்று உயர் நிலங்களில் தென்னை, பலா, பாக்கு, வெற்றிலை, மிளகு போன்றனவும் பயிரிடப்பட்டன. கரையோரப் பகுதியான களுத்துறை, பெந்தோட்டை, தொட்டகமுவ, மொரட்டுவ, களனி போன்ற இடங்களில் தெங்குப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தது. கறுவா முக்கிய பயிர்ச் செய்கையாக இருந்ததுடன் பிரதான ஏற்றுமதிப் பொருளாகவும் விளங்கியது. அதனோடு பாக்கு, மிளகு, சாதிக்காய், ஏலம் என்பனவும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனால் நெற்பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம் குறைந்தது. இரத்தினக்கற்கள் யானைதந்தங்கள் என்பவனவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தியா, அராபியா, சீனா, பாரசீகம், எகிப்து ஆகிய நாடுகளே வர்த்தகத்துடன் அதிகம் தொடர்பு கொண்ட நாடுகளாகும். வெளிநாட்டு வர்த்தகம் அரசனின் ஏகபோக உரிமையாக இருந்தது.

## மக்கள் வாழ்க்கையில் வெளிப்படையாகக் காணப்பட்ட இயல்புகள்

- ★ தொழில் அடிப்படையில் சாதிப்பாகுபாடு.
- ★ தந்தையைத் தலைமையாகக் கொண்ட சமுதாயம்.
- ★ சமய, பண்பாட்டு விடயங்களில் ஈடுபட்ட பெண்களும் இருந்தமை.
  உ-ம் : உலகுடையதேவி, பத்மாவதி
- ★ சில விளையாட்டுக்கள் சமூகத்திற்கு அறிமுகமாதல் (ஊஞ்சலாட்டம்).
- ★ வெசாக், பொசன், எசல போன்ற விழாக்கள் சேர்த்துக் கொள்ளப்படல்.
- ★ பெயர் வைத்தல், திருமணம், மரணம் போன்றவை தொடர்பான சடங்கு முறைகள் சேர்த்துக் கொள்ளப்படல்

### பயிற்சி

பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னர் உள்ள காலப்பகுதியின் மக்கள் வாழ்க்கை பற்றிய விபரங்களுடன் சுவர்ப் பத்திரிகைக்கு கடிதம் ஒன்று எழுதுக.

## சமயம்

மாகனின் ஆக்கிரமிப்பினால் இராசரட்டை வீழ்ச்சியுற்ற விதம் முன்னைய பாடங்களில் விபரிக்கப்பட்டுள்ளது. இராசரட்டைப் பண்பாட்டில் சமயம் அரசியலோடு பின்னிப் பிணைந்து இருந்தது, இதனால் மாகனின் ஆக்கிரமிப்புக் கொள்கை பௌத்த சமயத்துடன் தொடர்புடையதாக இருந்தது, பௌத்த நூல்கள், கட்டடங்கள் என்பன அழிக்கப்பட்டதுடன், பிக்குகளும் துன்புறுத்தப்பட்டனர். இதனால் பிக்குகள் வெளிநாட்டுக்கும். இலங்கையின் தென்மேற்குப் பிரதேசத்திற்கும் இடம்பெயர்ந்தனர். எனவே குறிப்பிட்ட பிரதேசத்தை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் பௌத்த சமயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சியின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட முதலாவது இராசதானியான தம்பதெனியாவைக் கட்டியெழுப்பிய 3 ஆம் விஜயபாகு மன்னன் பௌத்த மத மேம்பாட்டிற்காக பல பணிகளை ஆற்றினான்.

## தம்பதெனியாக் காலம்

### 3 ஆம் விஜயபாகு மன்னனின் சமயப் பணி

- ★ மாகனின் படையெடுப்பால் இடம்பெயர்ந்த பிக்குகளை மீண்டும் வரவழைத்தல்
- ★ தலைநகரில் விஜயசுந்தரராம எனும் விகாரையை நிர்மாணித்து அதனைப் பிக்குகளின் தலைமைப் பீடமாக ஏற்படுத்தல்.
- ★ கொத்மலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவை வைப்பதற்காக கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல மலையின் உச்சியில் தலதா மாளிகை ஒன்றினை அமைத்தான்.

★ களனி விகாரை, அத்தனகல விகாரை போன்ற விகாரைகளைப் புனருத்தாரணம் செய்தல்.

★ உபசம்பதா வைபவத்தை மீண்டும் நடாத்தி, பௌத்த சங்கத்தை கட்டி எழுப்புதல்

★ அழிந்து போன பௌத்த நூல்களைக் கல்விமான்கள் மூலம் மீண்டும் எழுதுவித்தல்.

★ பிக்குகளின் ஒழுக்க மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

★ மூன்றாம் விஜயபாகுவின் பின்னர் அரசனான 2 ஆம் பராக்கிரமபாகு சமயத்திற்கும், பண்பாட்டிற்கும் மகத்தான பணியாற்றினான்.

★ பிக்குகளினதும் விகாரைகளினதும் தேவைகளுக்கு ஏற்ற வகையில் ஒழுக்கக் கோவையொன்றைத் தொகுத்தான். தம்பதெனிய கத்திகாவத்த என்று இது அழைக்கப்படுகின்றது.

★ பெலிகலையில் வைக்கப்பட்டிருந்த பற்சின்னத்தைத் தம்பதெனியாவில் அமைக்கப்பட்ட தலாதா மாளிகைக்கு கொண்டு வந்தான்.

★ ஆண்டுதோறும் உபசம்பதா வைபவத்தை நடத்துவித்தான்.

## குருநாகல் காலம் (குருநாகல் யுகம்)

★ குருநாகலைக் காலத்தில் பௌத்த மதத்தின் வளர்ச்சியின் பொருட்டுப் பல நூல்கள் எழுதப்பட்டன. பன்சிய பணஸ் ஜாதிகய, சிங்கள போதி வங்ச, அநாகத்த வங்ச, தலதா சிறித என்பனவே அவைகளாகும்.

★ நான்காம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இலக்கியம் வளர்ச்சியுற்றது. எடுத்துக்காட்டாக கண்டி, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் சமயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதைக் குறிப்பிடலாம்.

★ வீதாகம ஸ்ரீ சாரானந்த பிரிவெனாவும், நான்காம் பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்டதாகும்.

## கம்பளைக் காலம் (கம்பளை யுகம்)

★ கம்பளைக் காலத்தில் லங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை, அம்பக்க தேவாலயம் என்பன நிர்மாணிக்கப்பட்டன. கடலாதெனிய, லங்காதிலக விகாரைகளில் தென்னிந்தியக் கட்டடக்கலையின் அம்சங்களைக் காணலாம்.

★ இக்காலகட்டத்தில் பௌத்த சமயத்தில் மகாயானப் பிரிவினதும் இந்து சமயத்தினதும் தாக்கம் இருந்தமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக கடலாதெனிய. லங்காதிலக்க விகாரைகளை நோக்கும்போது பாரிய புத்தர் திருவுருவம் வழிபாட்டிற்குரிய முக்கிய சிலையாக மூலக் கோவிலும், உபுல்வன், சிவன், வீபீஷணன், கணேசர், முருகன் எனும் தெய்வங்களின் சிலைகள் வெளிப்புறச் சுவர்களின் இடையிலும் (மாடக்குழிகளில்) வைக்கப்பட்டுள்ளன.

## கோட்டைக் காலம்

- ★ கோட்டைக்காலத்தில் சமய வளர்ச்சியின் பொருட்டு பல கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ★ 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனால் பெப்பிலியான சுனேத்திராதேவி பிரிவெனா வீதாகம பிரிவெனா, பத்மாவதி பிரிவெனா, தெவிநுவர குலதிலக்க பிரிவெனா போன்ற பௌத்த மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டன.

### பயிற்சி

பொலன்னறுவை இராசதானியின் வீழச்சியின் பின்னரான காலங்களை மனதில் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| காலம் | செய்யப்பட்ட சமயப் பணிகள் | உதவி புரிந்தோர் |
|---|---|---|
| | | |

## மொழியும் இலக்கியமும்

பொலன்னறுவையின் வீழ்ச்சியின் பின்னரான தம்பதெனிய கோட்டை காலங்களில் மொழி, இலக்கிய வளர்ச்சி சிறப்புற்றுக் காணப்பட்டன. கல்விக்கும், இலக்கிய வளரச்சிக்கும் அரசர்களின் ஆதரவு கிடைத்தமையும், கல்வி மத்திய நிலையங்கள் பல அமைக்கப்பட்டமையும், கல்விமான்கள் பலர் இருந்தமையும் இவ்வாறான எழுச்சிக்கு காரணங்களாக அமைந்தன.

தம்பதெனிய அரசின் முதலாவது மன்னனான மூன்றாம் விஜயபாகுவின் காலத்திலேயே இலக்கிய வளர்ச்சி ஆரம்பமானது. அவன் உள்நாட்டு, வெளிநாட்டு கல்விமான்களைக் கொண்டு நூல்கள் எழுதுவித்ததாகக் கூறப்படுகின்றது. அடுத்தாக தம்பதெனியாவை ஆட்சி செய்த 2 ஆம் பராக்கிரமபாகு இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினான். அவனும ் ஒரு சிறந்த கல்விமானாக இருந்தான். 'கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டிதன்' எனும் சிறப்புப் பெயரையும் இவன் பெற்றுள்ளான்.

## இம்மன்னரது காலத்தில் எழுதப்பட்ட நூல்களாவன

தர்மசேனரின் சத்தர்மரத்தனாவலிய, புத்த புத்ர தேரரின் பூஜாவலிய என்பன இந்தக் காலத்தைச் சேர்ந்த முக்கிய நூல்களாகும். 'கவிசிலுமின' 2ஆம் பராக்கிரம பாகு மன்னனால் எழுதப்பட்டதாகும்.

- ★ சித்தசங்கராவ என்ற பிரசித்தி பெற்ற இலக்கிய நூல்
- ★ பிக்குகளை வழி நடத்துவதற்கென வெளியிடப்பட்ட ‘தம்பதெனி கதிகாவ’
- ★ 2 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் நாளாந்த செயற்பாடுகளைக் கூறும் கந்தவுரு சிரித்த
- ★ புத்தபுத்ர தேரரின் வைத்தியநூலான ‘யோகார்ணாவ’ என்பன இக்காலத்தில் எழுந்த நூல்களாகும்.
- ★ இவை தவிர விசுத்திக்மார்க்க சன்னய, சமந்த கூட வர்ணனா ரசவாகினி, சாரசங்கிரஹய, தூபவங்ஸ ஆகிய பாளிய மொழியில் எழுதப்பட்ட நூல்களும் உள.
- ★ பரோபகாரய எனும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட நூலும் இக்காலத்தைச் சேர்ந்ததெனக் கூறப்படுகின்றது.

குருநாகலைக் காலமும் இலக்கிய வளர்ச்சியில் சிறந்து விளங்கியதாகக் கூறப்படுகின்றது. உம்மக்க ஜாதகய, பன்சியபனஸ் ஜாதகய, தலதா சிறித, சிங்கள போதி வங்சய, பூஜாவலிய என்பன இக்கால கட்டத்தில் எழுதப்பட்ட இலக்கிய நூல்களாகும். குருநாகலைக் காலத்தில் தந்ததாது, வெள்ளரசுமரம் போன்ற புனிதப் பொருட்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கிய நூல்களைக் காணக்கூடியதாக உள்ளது.

‘சந்தேசய’என்ற தூதுப் பிரபந்தங்கள் சிங்கள மொழியில் முதன்முதல் எழுந்தது கம்பளைக் காலத்திலாகும். பழைய சந்தேச காவியமான மயூர சந்தேச (மயில் விடுதூது) எழுதப்பட்டதும் இக்காலத்திலேயே ஆகும். கம்பளைக் காலத்தில் பாளி இலக்கியங்களும் எழுதப்பட்டுள்ளன.

கோட்டைக்காலம் சிங்கள இலக்கிய வரலாற்றில் மிகவும் சிறப்புப் பெறும் காலமாக விளங்குகிறது. இந்தக் காலத்தில் இருந்தவர்கள் தொட்டகமுவே ஸ்ரீராகுல தேரர், சித்தார்த்த விமல கீர்த்தித் தேரர், வனரத்ன தேரர், வீதாகம மைத்திரி தேரர், வெத்தாவே தேரர் என்போராவார்.

கோட்டைக்காலத்தில் இலக்கியம் வளர்ச்சியுறுவதற்கு அக்காலத்தில் அங்கு இருந்த கல்வி நிலையங்களும் உறுதுணையாக விளங்கின. கல்வி நிலையங்களாவன:

வீதாகம ஸ்ரீ குணானந்த பிரிவென, தொட்டகமுவே விஜயபா பிரிவென, கொரகல பத்மாவதி பிரிவெனா, தெவிநுவர திலக்க பிரிவெனா, பெப்லியான சுனேத்ராதேவி பிரிவெனா.

## இலக்கிய நூல்கள் பின்வருமாறு

பெரகும்பா சிரித்த, காவிய சேகர, புதுகுணலங்காரய, குத்தில காவிய, லோவெட சங்கராவ, ஹங்ச பரவி, செலலிஹினி, கிரா சந்தேச காவியங்கள்

இலக்கியம் பல விதமானவையாக இருப்பது கோட்டைக்காலத்தில் காணக்கூடிய சிறப்பம்சங்களாகும்.

உ-ம் குவேனி அஸ்ன, குவன்மல் நிஹண்டுவ, சத்தர்ம ரத்னாகரய, பத்தி சத்தகய

## தமிழ்மொழி நூல்களாவன

(சரசோதிமாலை) சரஸ்வதி மாலை, சேகராசசேகர மாலை, தக்ஷண கைலாய புராணம், இரகு வம்சம்

### பயிற்சி

பொலன்னறுவைக் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| காலம் | இலக்கியநூல் | எழுதியோர் |
|---|---|---|
| | | |

## யாழ்ப்பாண இராச்சியம்

கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின்படி சுயாதீன அரசாக விளங்கிய பொலன்னறுவை அரசின் வீழ்ச்சியின்பின் அதாவது, பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலாகும். யாழ்ப்பாண அரசைப் பற்றி அறியக் கூடியதாக இருப்பது யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூலிலாகும். இந்நூல் 1736 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டதாக கூறப்படுகின்றது. எனவே யாழ்ப்பாண வைபவமாலையில் விஜயகூளங்கை ஆரியச் சக்கரவர்த்தியுடன் தொடங்கி 16ம் நூற்றாண்டு போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்படும் வரை அதனை ஆட்சி செய்த அரசர்கள் 12 பேரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

01. விஜயகூளங்கை
02. குலசேகரன்
03. விக்கிரமன்
04. வரோதயன்
05. மார்த்தாண்டன்
06. குணபூசணம்
07. வீரோதயன்
08. ஜயவீரன்
09. குணவீரன்
10. கனகசூரியன்
11. பரராசசேகரன்
12. சங்கிலி

ஆரியச் சக்கரவர்த்திகளின் கீழ் பலம் பொருந்தியதாக விளங்கிய யாழ்ப்பாண அரசு சில சந்தர்ப்பங்களில் தென் இலங்கையை ஆக்கிரமித்துக் கப்பம் பெற்றுச் சென்றதும் உண்டு. கம்பளையில் ஆட்சி செய்த 3 ஆம் விக்கிரமபாகு மன்னனின் காலத்தில் மாத்தளை, வத்தளை, களனி ஆகிய பிரதேசங்களை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆக்கிரமித்து சிலாபம் போன்ற பிரதேசங்களில் முத்துக்குளித்தல் போன்றவற்றைத் தமதாக்கிக் கொண்டனர்.

யாழ்ப்பாண அரசு வலிமை பெறுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது தென் இந்திய விஜயநகரப் பேரரசின் உதவி கிடைத்தமையாகும். பின்னர் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனால் யாழ்ப்பாண அரசு கோட்டை அரசுடன் இணைக்கப்பட்டது. எனினும் இவனது காலத்தின் பின்னர் 4 ஆம் புவனேகபாகுவின் காலத்தில் யாழ்ப்பாண அரசு சுயாதீன அரசாகியது.

1619 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்ட பின்னர் அந்த அரசு முடிவுற்றது.

**பயிற்சி**

யாழ்ப்பாண அரசின் தோற்றம், எழுச்சி, வீழ்ச்சி என்பன பற்றி சுவர்ப்பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்று எழுதுக.

## சுருக்கம்

★ மாகனின் கொடூர ஆக்கிரமிப்புடன் இராஜதானி தென்மேற்கு நோக்கி 13 ஆம் நூற்றாண்டிலிருந்து இடம்பெயரத் தொடங்கியது.

★ தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகல், கம்பளை, கோட்டை எனும் இடங்கள் தலைநகர்களாயின.

★ இவற்றின் முக்கிய இயல்பு, ஒவ்வொன்றும் குறுங்காலத்திற்கே நின்று நிலைத்ததாகும்.

★ அவ்வாறு நிகழ்ந்ததற்குக் காரணம், பாதுகாப்புக் கருதி மிகவும் பொருத்தமான இடங்களுக்கு இடம் மாறியமையாகும்.

★ இவ்வரசுகள் மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலேயே அதிகாரத்தைச் செலுத்தின. இறுதியில் உருவான கோட்டையே முழு நாட்டையும் ஆண்டது.

★ இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சுதந்திர அரசொன்று காணப்பட்டது,

★ இராசதானிகள் இடம்பெயரும்போது முன்பு நிலவிய பொருளாதார அமைப்புகளும் மாற்றமுற்றன.

★ இக்காலத்தில் சமய இலக்கிய துறைகளில் முன்னேற்றம் காணப்பட்டது.

**மேலதிக வாசிப்பிற்கான நூல்கள்**

வரலாறு தரம் 8, 9 தரங்களுக்கான பாடநூல்கள் 1922 - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்